

NOOLAHAM
FOUNDATION

# Biographical Dictionary
# Project Report
# 2016













www.noolahamfoundation.org

| | |
|---|---|
| செயற்றிட்ட தலைப்பு | வாழ்க்கை வரலாற்றுக் கலைக்களஞ்சியம் |
| செயற்றிட்ட எண் | NF/PG/2016/0003 |
| செயற்றிட்ட இடம் | இலங்கை |
| செயற்றிட்ட காலம் | 2016 |
| நிறைவேற்றும் அமைப்பு | நூலக நிறுவனம் |
| முக்கிய பங்குத்தாரர்கள் | நூலக நிறுவனம் |

**நூலக நிறுவனம்**

நூலக நிறுவனமானது இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்களின் அறிவுத் தொகுதிகளையும் மரபுரிமைகளையும் ஆவணப்படுத்துவதில் ஈடுபட்டு வரும் ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனமாகும். 2005 முதல் திறந்த, கூட்டுச் செயற்பாட்டை முன்னிறுத்திச் செயற்பட்டு வரும் நூலக நிறுவனம் இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்கள் தொடர்பான ஒரு முதன்மையான உசாத்துணைத் திரட்டினை உருவாக்கியுள்ளது. பல்வேறு செயற்றிட்டங்கள் மூலம் ஆவணப்படுத்தற் பணிகளை நூலக நிறுவனம் முன்னெடுத்து வருகிறது.

**செயற்றிட்டச் சுருக்கம்**

ஆளுமைகளை ஆவணப்படுத்தலும் அவர்களது வாழ்க்கை வரலாறுகளை ஆவணமாக்கலும் இச்செயற்றிட்டத்தின் முக்கிய செயற்பாடாகும். "ஈழத்து வாழ்க்கை வரலாற்றுக் கலைக்களஞ்சியம்" நூல் வரிசையை ஆரம்பித்து ஆயிரம் ஆளுமைகள் பற்றிய விபரங்கள் அடங்கிய முதலாவது தொகுதியை வெளியிடுவது இச்செயற்றிட்டத்தின் அடைவாகத் திட்டமிடப்பட்டது.

**அறிமுகமும் பின்புலமும்**

வரலாற்று எழுத்தியலில் சமூக பொருளாதர மற்றும் பண்பாட்டு விடயங்கள் முக்கியம் பெறுகின்றன. அவற்றுள் அப்பிரதேசங்களில் வாழ்ந்த ஆளுமைகளின் வாழ்க்கை வரலாறுகளும் முக்கிய உசாத்துணையாக அமைகின்றன. அதனடிப்படையில் இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்களைப் பொறுத்தவரை Dictionary of Biography of the Tamils of Ceylon நூல் 700க்கும் அதிகமான ஆளுமைகள் தொடர்பான தகவல்களைக் கொண்டிருக்கிறது. தமிழில் வெளிவந்த நூல்களுள் 550 யாழ்ப்பாண கலைஞர்கள் தொடர்பான கலைஞர் விபரத்திரட்டு என்ற நூல் மிகவும் முக்கியமாகின்றது. அத்துடன் பு.எம்.புன்னியாமீன் 350 கலைஞர்கள் பற்றிய விபரங்களைத் திரட்டியுள்ளார். இச்செயற்பாடுகளோடு சில தனிநபர்கள், எழுத்தாளர்கள், கலைஞர்கள் பற்றிய நூல்களும் வெளிவந்துள்ளன.

ஈழத்தின் தமிழ் பேசும் சமூகங்களில் உள்ள எழுத்தாளர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள், சமூக சேவகர்கள், சமயப்பெரியார்கள், கலைஞர்கள், ஆய்வாளர்கள், அரசியல் ஆர்வலர்கள் மற்றும் முக்கிய நபர்கள் என்றவகையில் அவர்களது செயற்பாடுகளை ஆவணப்படுத்தல் முக்கியமாகின்றது. அவ்வகையில் 2013 இல் நூலக நிறுவனம் அதற்கான செயற்றிட்டங்களை மேற்கொண்டது. அதன்படி 2015 வரை 2700 ஆளுமைகளின் வரலாறுகள் பதிவு செய்யப்பட்டன. அதன் தொடர்ச்சியாக இந்தச் செயற்றிட்டம் திட்டமிடப்பட்டது .

**இலக்குகளும் நோக்கங்களும்**

ஏற்கனவே தொகுக்கப்பட்டுள்ள ஆளுமை விபரங்களை அவற்றுக்குரிய உசாத்துணை விபரங்களுடன் ஒப்பிட்டுச் சரிபார்த்து முழுமைப்படுத்தி அவற்றிலிருந்து தெரிவுசெய்து ஆயிரம் ஆளுமைகளைத் தெரிவு செய்து ஈழத்து வாழ்க்கை வரலாற்றுக் கலைக்களஞ்சியத்தின் முதலாவது தொகுதியை வெளியிடல்

**செயற்பாடுகள்**

- ஏற்கனவே தொகுக்கப்பட்டுள்ள ஆளுமை விபரங்களை அவற்றுக்குரிய உசாத்துணை விபரங்களுடன் ஒப்பிட்டுச் சரிபார்த்தல்
- முழுமைப்படுத்தாதிருந்த ஆளுமை விபரங்களை முழுமைப்படுத்தி ஒவ்வொரு கட்டுரையையும் தன்னளவில் முழுமையாக்கல்
- எல்லாக் கட்டுரைகளையும் ஒரே கட்டமைப்புடன் கலைக்களஞ்சிய நடையில் மாற்றியமைத்தல்
- புதிய தகவல்களை இணைத்து இற்றைப்படுத்தல்
- விடுபட்ட முக்கிய ஆளுமைகள் தொடர்பான கட்டுரைகளை இணைத்தல்
- ஆயிரம் ஆளுமைகளைத் தெரிவு செய்து ஈழத்து வாழ்க்கை வரலாற்றுக் கலைக்களஞ்சியத்தின் முதலாவது தொகுதியை வெளியிடல்

**அடைவுகள்**

- 2013இல் தொடங்கப்பட்டு உருவாக்கப்பட்ட ஆளுமை விபரக் கட்டுரைகளின் உள்ளடக்கங்கள் சரிபார்க்கப்பட்டு இற்றைப்படுத்தப்பட்டன.
- ஏற்கனவே உருவாக்கப்பட்ட உள்ளடக்கங்கள் சரிபார்க்கப்பட்டதுடன் 250 வரையான கட்டுரைகள் போதிய உசாத்துணைகள், விபரங்கள், முக்கியத்துவம் இன்மையால் நீக்கப்பட்டன.
- கட்டுரைகளின் எழுத்துப்பிழைகள், பெயர்ப்பிழைகள், கட்டமைப்பு ஆகியவை சரிபார்க்கப்பட்டன.
- முதலாவது தொகுதிக்கான ஆயிரம் ஆளுமைகள் தெரிவுசெய்யப்பட்டனர்.

**எதிர்க்கொண்ட சவால்கள்**

- இச்செயற்றிட்டமானது புதிதாக ஆய்வுகளை மேற்கொண்டு கட்டுரைகளை எழுதும் வகையில் உருவாக்கப்பட்டிருக்கவில்லை. ஏற்கனவே வெளியான உசாத்துணை வளங்களிலிருந்து தகவல்களைத் திரட்டுவதே திட்டமிடப்பட்டது. அவ்வகையில் ஏற்கனவே உள்ள ஆவணங்களில் இருக்கக்கூடிய பிழைகள் தொடர்ந்தும் காணப்பட்டன.
- மலையக ஆளுமைகள், பெண் ஆளுமைகள் தொடர்பான போதிய உசாத்துணை வளங்கள் இன்மையால் குறித்த ஆளுமைகள் தொடர்பான போதிய தகவல்களைத் தொகுத்துக்கொள்ள முடியவில்லை.
- பெண்கள், மலையகம் சார்ந்த பிரதிநிதித்துவம் இன்மையால் அத்தகைய கட்டுரைகளைச் சேர்ந்த்த பின்னரே நூலாக வெளியிட வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டதன் அடிப்படையில் கலைக்களஞ்சியத்தின் முதலாவது தொகுதியினை வெளியிடும் திட்டத்தினைக் கைவிட வேண்டி ஏற்பட்டது.

**கற்றலும் பரிந்துரைகளும்**

- ஈழத்தின் தமிழ் பேசும் சமூகங்கள் சார்ந்த உசாத்துணை வளங்களைத் திரட்டி விடுபட்ட ஆளுமை விபரங்கள் சேர்க்கப்பட வேண்டும்.
- பெண் ஆளுமைகள், மலையக ஆளுமைகள் தொடர்பான உசாத்துணை வளங்கள் திரட்டப்பட வேண்டும்.
- எதிர்வரும் காலங்களில் கலைக்களஞ்சியத்தினைத் தொகுத்து வெளியிடல் வேண்டும்.
- தற்போது வாழ்ந்து கொண்டிருக்கும் ஆளுமைகள் தொடர்பான விபரங்களைத் தொகுக்கும்போது அவர்களை வாய்மொழி வரலாறு மூலம் முழுமையாக ஆவணப்படுத்துவதோடு அவர்களிடம் உள்ள அவர்கள் தொடர்பான ஏனைய ஆவணங்களையும் பெற்று எண்ணிமப்படுத்தி முழுமைப்படுத்த வேண்டும்.